

Vol.21 | No. 10 | October 2017

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



Pope Francis Kisses the Hand of
Fr. Tom Uzhunnalil




Tailoring Centre, Kattuvilai-Kallukatti, Kuzhithurai
12.09.2017



Catechism Forane level Teachers' Seminar -
Soosaipuram 24.09.2017



Catechism Students from Munchirai Visited
Perunchilampu 30.09.2017

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No :10 October 2017

# இறையருள்
# IRAIARUL



## Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**
*Chief Editor*
**Fr. Joseph Santhosh**
*Executive Editor*
**Mr. Soundara Raj**
*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 05 |
| ஆயர் திருமுகம் | 06 |
| மறைக்கல்வி | 11 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 13 |
| Feast and B'days | 13 |
| இளையோர் இயக்கம் | 14 |
| வின்செண்ட் தே பவுல் | 15 |
| இல்வாழ்வு இயக்கம் | 17 |
| மரியாயின் சேனை | 18 |
| அல்போன்சா கல்லூரி | 19 |
| மறைமாவட்டச் செய்திகள் | 21 |
| மறைவட்டச் செய்திகள் | 22 |
| Bishop's Engagements | 24 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/71/2017 30 September 2017

Dears,

Greetings from the Eparchy of Thuckalay!

Family visit is an important element of the ministry of a priest especially of those priests who work in parishes. In the given context of our Eparchy, it is an essential and a much-need ministry. Hence, in this circular, I want to reflect with you on the topic of family, which is one of our priorities. I have gathered these reflections from CPCI bulletin and I gratefully acknowledge it.

The families make the priests. The priests are what they are because of the families. We would be nothing without them. Our families have given their best to us. Not only members of our own families but also the numerous families that we have come into contact with during the course of our pastoral ministry have in so many ways inspired and supported us. They have shaped our vision and strengthened our vocation. The trust that the families place in us is obvious from their request to participate in almost all their family celebrations. From birth to death, we are affectionately invited to be with them.

"Father, when would be your next visit? When will be visiting us again?" are the final questions asked after every visit to the families. People always wish that their priests visited them frequently. No one resist a visit from a priest. Everyone welcomes us warmly when we visit the family. I am sure this is our personal experience too. The usual complaint against us priests is that we do not visit their families. Any priest who visits the families regularly is considered good. Success in parish ministry depends on the frequency of our family visits.

No one but a priest can walk into any house in the parish at any time of the day or night. Such is the freedom that a priest enjoys. Priesthood alone provides this blessed privilege. Hence, it becomes a sacred duty as well. If family visits are used well, much good can be done and many problems can be solved. These visits can bring back many people back to faith and if neglected, sure enough, our ministry becomes ineffective. Whatever excellent work a priest might engage himself in, if he fails to meet the families in their homes, hardly is his ministry considered priestly! Success of parish ministry is measured in terms of the visits under-

taken. Hence, the family provides the much needed priestly identity.

**Family visit is an Art**

Often our visits to families are formal. They are done out of compulsion. Take for instance, the Easter blessing or the house blessing to be undertaken before the annual parish feast or Home Mission. They are performed in a hurry. We enter through the front door and get out of the back door, together with the Kaikar/sacristan. This cannot be counted as a family visit. Hardly can the ritual of sprinkling the Holy Water on the walls and rooms even when the members of the family are present can be considered a family visit.

Meeting the families mean spending quality time with them, which means, the priest fixes a time convenient to them. Getting to know the family is an art. It involves time and patience. As Jesus patiently entered into the inner self of the Samarian woman (John 4), the priests gradually builds confidence and vibrates with the family. He feels one with his people, strikes an affectionate chord with the rhythm running in their hearts. Consequently, the encounter leaves a lasting impact both on the persons in the family and in the priest himself. As in the Gospel of St John, when the initial apprehensions were overcome, self-discovery happened.

When the Samarian Women fearlessly disclosed her real self, quite spontaneously Jesus too revealed himself. While Jesus unfolded the status of the Samarian woman, she, in turn, recognized Jesus as the Prophet, the long awaited Messiah (Jn 4:29). Much the same disclosure and enlightenment happens during a well-organised family visit.

**Rewards here and now**

Any priest visiting the homes of his parishioners is not considered an outsider but a member of their own family. No wonder therefore, that people call their priests as "Father!" This, then is the reward the hundredfold, promised to those who follow Jesus (Mt 19:29). It is granted here and now. Precisely because of this emotional bonding some of the priests find it hard to quit their parish ministry even if they are offered higher position, brings monetary benefits and provides material comforts. Genuine love experienced in the family visits is held far more fulfilling than any position in the ecclesiastical ladder.

Any priest who desires to make his ministry meaningful has to set families as the first in the list of his priorities. Being with them and accompanying them is indispensable today. Visiting them is only the first step towards realizing this priority. Much more is to be done to accompany them in a meaningful

way. Setting the priority and visiting them systematically would help to draft plans together. A meaningful action plan can be outlined in consultation with them alone. Taking the teachings of Pope Francis on family, we need to have wider consultations with the families in our parishes. Any teaching, however radically new, relevant or useful, cannot be actualised unless decisions are made in common. Personally meeting the families in their own residence would bring to light their day-to-day struggles and hopes, anxieties and aspirations, which are essential to promote an enriched family living.

To make this home visit regular and systematic the Eparchy has prepared home visit diaries and the sisters are already using them. I strongly recommend to you, dear Fathers, to make use of the diary. During my personal chats with you my constant recommendation and suggestion was regarding the family visits, which you are doing with utmost care and responsibility. However, documenting these visits and writing down relevant information is also the prime duty of the priests.

CONCLUSION

The month of October is dedicated to the Holy Rosary. According to an account by fifteenth-century Dominican, Alan de la Roch, Mary appeared to St Dominic in 1206 after he had been praying and doing severe penances because of his lack of success in combating the Albigensian heresy. Mary praised him for his valiant fight against the heretics and then gave him the Rosary as a mighty weapon, explained its uses and efficacy, and told him to preach it to others. Since then, Catholics all over the world have prayed the rosary fervently and received abundance of favours from God. In fact, early tradition attributes the defeat of the Albigensians at the Battle of Muret in 1213 to the Rosary. St Pius V attributed the great defeat of the Turkish fleet on the first Sunday of October 1571 to the fact that at the same time the Rosary confraternities at Rome and elsewhere were holding their processions. Accordingly, he ordered a commemoration of the Rosary to be made on that day. Two years later, Pope Gregory XIII allowed the celebration of a feast of the Rosary in churches having an altar dedicated to the Rosary. In 1671, Clement X extended the feast to all Spain. A second great victory over the Turks, who once, like the Russians, threatened the ruin of Christian civilization, occurred on 5 August 1716, when Prince Eugene defeated them at Peterwardein in Hungary. Thereupon Pope Clement XI extended the feast of the Rosary to the whole Church. Today we celebrate the feast of Our Lady of the Rosary on 7 October. Let us in-

culcate this pious practice among our people and insist with them to pray the Rosary in their homes daily with great devotion. Besides the practices of the Chain Rosary and Rosary Rally, let us find ways and means to inculcate love for our Blessed Virgin Mary during this month of the Holy Rosary.

With my prayers and blessings,


Yours in Christ Jesus,

+George Rajendran SDB

Bishop of Thuckalay

## அக்டோபர் மாத முக்கிய நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 2 | : | அருட்பணிப் பேரவை, தக்கலை சங்கமம் |
| 8 | : | களியல் ஆலய அர்ச்சிப்பு |
| 15 | : | களியல் ஆலய பொன்விழா |
| 15 | : | மிஷன் லீக் பேரணி, கல்லுவிளை - காட்டாத்துறை |
| 21 | : | தக்காளிவிளை ஆலய அர்ச்சிப்பு |
| 22 | : | நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு - காணிக்கை |
| 22 | : | தொடர் செபமாலை |
| 29 | : | செபமாலைப் பவனி, அதங்கோடு - படந்தாலுமூடு |




## அருட்சகோதரர்களிடமிருந்து...

கேரளா வடவாதூர், குந்நோத், ஆலுவா ஆகிய குருமடங்களில் பயிலும் அருட்சகோதரர்கள் முதல் பருவ விடுமுறைக்காக தங்கள் இல்லங்களுக்கு வருகை தந்துள்ளனர்.

சத்னா குருத்துவக்கல்லூரியின் வெள்ளிவிழா அக்டோபர் 3, 4 தேதிகளில் நடைபெற உள்ளது. உயர் பேராயர் மற்றும் பல்வேறு மறைமாவட்ட ஆயர்களும் கலந்து கொள்கின்றனர். அக்டோபர் 19 அன்று அங்கு தேர்வுகள் ஆரம்பமாக உள்ளது.

திருத்தொண்டர் ஜெபனேஷ் திருத்தொண்டுதள அனுவத்திற்காக உஜ்ஜெயின் சென்றுள்ளார்.

திருத்தொண்டர் சுபின் அவர்கள் தன்னுடைய மேய்ப்புப் பணி பயிற்சியை ஆலுவா புனித ஜோசப் குருத்துவக் கல்லூரியில் நிறைவு செய்துள்ளார். தற்போது திருத்தொண்டர் களப்பயிற்சியை பிலாங்கரை பங்கில் 20/10/2017 அன்று தொடங்கியுள்ளார். அத்தோடு மறைமாவட்ட நிதியாளருக்கு உதவியாகவும் பணியாற்றுவார்.

அருட்சகோதரர் ஷிஜோ ஜோஸ் அவர்கள் இறையியல் மேற்படிப்பிற்காக உரோமை சென்றுள்ளார்.

அருட்சகோதரர் டோஜி | தலைவர்

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Pastoral Letter No/GR/32/2017 13 September 2017

# ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே!
அருட்சகோதரிகளே! மற்றும் அன்பு இறைமக்களே!
நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும், அருளும் உரித்தாகுக!

நாம் ஆண்டுதோறும் அன்னை மரியாவின் விண்ணேற்பு விழாவையும், பிறந்த நாள் விழாவையும் முறையே ஆகஸ்ட் 15 மற்றும் செப்டம்பர் 8 ஆகிய நாட்களில் கொண்டாடி வருகிறோம். இந்நாட்களில் தூய கன்னி மரியா இறைவனை ஈன்றவர் எனும் முறையிலும் நமது மறைமாவட்ட விண்ணக பாதுகாவலி எனும் முறையிலும் சிறப்பாக இவ்விழாக்களை நாம் நமது பங்குகளில் இந்நாட்களில் கொண்டாடினோம். குறிப்பாக செப்டம்பர் 1 முதல் 8 நாட்கள் நோன்பு இருந்து மாதாவிடம் நமது பக்தியை வளர்க்க முயற்சித்தோம். அன்னையின் பரிந்துரையால் நன்மைகள் அதிகம் பெற்றும் வருகிறோம்.

அவ்வாறு புனித வின்சென்ட் தே பவுல் சபையின் நிறுவனரான அருளாளர் பிரடரிக் ஒசானாம் அவர்களின் நினைவு நாளும் செப்டம்பர் 8-ஆம் நாள் ஆகும். 1853-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாள் அவர் விண்ணில் பிறந்தார். தூய மரியா மண்ணில் பிறந்த தினத்தை திருச்சபை செப்டம்பர் 8-இல் கொண்டாடுவதால் அருளாளர் பிரடரிக் ஒசானாமின் நினைவு நாளாக செப்டம்பர் 9-ம் தேதியை, புனித வின்செண்ட் தே பவுல் சபையின் திருநாளாக கத்தோலிக்கத் திருச்சபை கொண்டாடுகிறது.

புனித வின்செண்ட் தே பவுல் பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் பூய் என்ற கிராமத்தில் 1581-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ம் நாள் ஏழை குடும்பத்தில் பிறந்தார். தமது மாமாவை போல தானும் குருவானவர் ஆக வேண்டும் என்று விரும்பி இறையியல் கற்று தன் 19-ம் வயதில் குருப்பட்டம் பெற்றார். “துயருறும் ஏழைகளுக்கு உதவுவதே தனது குருத்துவ வாழ்வின் குறிக்கோள்” என உறுதி எடுத்து இளைஞர்களை ஒருங்கிணைத்து மறைபரப்பு பணிக்காக பல சபைகளை

ஏற்படுத்தினார். அனாதைகளையும் ஆதரவு அற்றோரையும் பராமரிக்க எண்ணற்ற இலவச இல்லங்களை ஏற்படுத்தினார். ஏழைகளுக்காகவே வாழ்ந்த புனித வின்சென்ட் தே பவுல் தமது 80-வது வயதில் 1660-ம் ஆண்டு செப்டம்பர் 27-ம் நாள் விண்ணகம் புகுந்தார். அவரது பிறன்பு பணிகளின் உள்ளுணர்வுகளை பின்பற்றி, குருக்கள், கன்னியர்கள் மற்றும் சகோதரர்கள் கொண்ட 150-கும் மேற்பட்ட துறவற சபைகள் இன்றும் இறைப்பணி ஆற்றுகின்றன. அவற்றில் பொது நிலையினரை உறுப்பினர்களாக கொண்ட ஒரே ஒரு சபை புனித வின்சென்ட் தே பவுல் சபையே என்பது குறிப்பிடத்தக்கது.

பாரிஸ் பல்கலை கழகத்தில் சட்டக்கல்வி பயின்று வந்த இருபது வயதுடைய இளைஞரான பிரடரிக் ஒசானாம், தன்னோடு சக வயது இளையோரையும் இணைத்து பேராசிரியர் பெய்லியுடன் ‘தருமசபை’ என்னும் பெயரில் ஒரு சபையை நிறுவினார். பிறரன்புக் பணியின் பாதுகாவலர் புனித வின்சென்ட் தே பவுலின் வாழ்வு, அவரின் பணிகள், கோட்பாடுகள் ஆகியவற்றுடன் இத் தருமச்சபையின் செயல் பாடுகள் ஒத்துப்போனதால் தாங்கள் தொடங்கிய சபைக்கு ‘புனித வின்சென்ட் தே பவுல் சபை’ என பெயர் மாற்றம் செய்தனர். 1833-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாள் தொடங்கப்பட்ட இச்சபை உலகம் முழுவதும் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது என்றால் அதன் நோக்கமும் செயல்பாடுகளுமே அதற்கு காரணம் எனலாம். நமது மறைமாவட்டத்திலும் இச்சபையானது முதன் முதலில் சூசைபுரம் பங்கில் 8-12-1963-ல் அமரர் அருட்தந்தை தாமஸ் வீட்டுவேலிக்குன்னேல் அடிகளாரால் தொடங்கப்பட்டு இன்றளவும் சிறப்புடன் இறைப்பணியாற்றி வருகிறது.

கத்தோலிக்க திருச்சபை என்னும் மறையுடலின் உறுப்புக் களில் ஒன்றே புனித வின்சென்ட் தே பவுல் சபை, இச்சபையில் உறுப்பினராகி ஏழைகளுக்காக உழைப்பது என்பது உண்மை யிலேயே ஒரு இறை அழைத் தலாகும். இவ்வழைப்பைப் பெற்று இன்று இறைப்பணியாற்றும் ஒவ்வொருவருக்கும் இத்தருணத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு இவ்வழைப்பை இன்னும் ஏராளமானோர் ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப வாழ வேண்டும் என்று உங்களை அன்போடு அழைக்கிறேன்.

நமது மறைமாவட்டத்தில் உத்திரங்கோட்டில் ஒசானம் உயர் கல்விமையத்தில் பல்வேறு பயிற்சிகள் நடைப்பெற்று வருகிறது. குறிப்பாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக

தொலைக்கல்வி திட்டம், கணினி, தட்டச்சு, தையல் போன்ற பயிற்சிகளும் TET போன்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளும் DB-Tech உதவியுடன் நடைபெறும் திறன்வளர் பயிற்சியும் நடைபெற்று வருகிறது. அத்தோடு ஆசாரிப்பள்ளத்தில் தொடங்க இருக்கும் நோயாளிகளுக்கான 'விடியல்' என்ற திட்டம், ஏழை நோயாளிகளுக்கு உதவிட 'காருண்யா நிதி உதவி திட்டம்' போன்றவற்றை தமது இயல்பான பணிகளுடன் வின்செந்தியர்கள் செயல்படுத்தி வருகின்றனர். இவற்றிற்கு பங்கு தந்தையர்களும் பங்குமக்களும் ஆதரவு அளித்து வருவதில் மகிழ்ச்சியடைகிறேன் அத்தோடு இந்நிறுவனங்கள் மென்மேலும் வளர்ந்து வர ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2017 - பிப்ரவரி 5-ஆம் நாள் எனது அதிகார ஆய்வு (Pastrol visit) உத்திரங்கோடு ஒசானாம் உயர்கல்வி நிலையத்தில் நடை பெற்றது என்பதை இத்தருணத்தில் நினைவுறுத்த விளைகிறேன். அங்குள்ள அனைத்து ஆவணங்கள் மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்த போது உண்மையில் மிக்க மகிழ்சியடைந்தேன். அதன் மூலம் தக்கலை மத்தியப் பேரவையின் செயல்பாடுகளின் தரத்தை என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. மத்திய சபை மறைமாவட்ட வளர்ச்சியில் எவ்வளவு கவனம் செலுத்துகிறதோ அந்த அளவுக்கு கிளைச்சபைகளின் செயல்பாடுகள் உங்கள் பங்கின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. எனவே, தொடர்ந்து இதே ஒத்துழைப்பை இச்சபை செயல்பாடுகளுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள் கிறேன். இருப்பினும் ஒரு சில கிளைச்சபைகளின் செயல்பாடு களில் தோய்வு இருப்பதை பங்கு ஆய்வின்போது என்னால் உணர முடிந்தது. இதனால் அக்கிளைசபைகள் செயல்படாமல் முடங்கி கிடப்பதையும் நான் அறிவேன். கடந்த ஆண்டுகளில் அத்தகு கிளைச்சபைகளை பங்குகளில் செயல்படுத்த பங்குத் தந்தையர்கள் தனிக் கவனம் செலுத்தக் கூறியிருக்கிறேன்.

இறைபணியில் ஈடுபடுவோரின் செயல்பாடுகள் பிறர் வெறுக்கும் நிலைக்கு உட்படக் கூடாது. அவ்வாறு நிகழுமாயின் "உங்களை எனக்குத் தெரியவே தெரியாது, நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என வெளிப் படையாக அறிவிப்பேன்" (மத்தேயு 7:23) என்ற இறைவார்த்தை நமக்கும் பொருத்தமான வகையில் அமைந்து விடும். எனவே துயருறும் ஏழையில் இறைவனை கண்டுணர்ந்து அவருக்கு பணிவிடை செய்து வாழ்வதே நம் தலையாய கடமைகளில்

ஒன்றாகக் கொள்ள வேண்டும். நம் ஒவ்வொருவரையும் தத்தம் தகுதிற்கேற்ப பணி செய்யவே இறைவன் அழைத்துள்ளார். நம்முள் ஏற்றத் தாழ்வுகள், பிரிவினைகள், முரண்பாடுகள், போட்டி பொறாமைகள், கலகங்கள் ஏற்படா வண்ணம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக வின்செந்திய உறுப்பினர்கள் சபையின் அடிப்படைத் தன்மை மாறாமல் செயல்பட வேண்டும். நல்ல எண்ணங்களை வளர்த்தி எடுக்க வேண்டும். பிறரை விமர்சனத் திற்குள்ளாக்கும் பார்வையிலிருந்து விடுபட்டு தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்யும் நிலைக்கு நாம் உயர வேண்டும். இதைத்தான் திருக்குறளில் திருவள்ளுவரும்

> "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்" - எனக் கூறியிருக்கிறார்.

இதையே நாமும் 'எங்கள் கடன்காரர்களை நாங்கள் மன்னிப் பதுபோல எங்கள் கடன்களையும் பாவங்களையும் மன்னியும்' என்று நமது அன்றாட செபமான "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே" என்னும் செபத்தில் உறுதியளிக்கிறோம். தத்துவ அறிஞரும், மனநல ஞானியுமான ஜேம்ஸ் ஆலன் அடிக்கடி சொல்லும் அற்புதமான கூற்று ஒன்று உண்டு. அது இவ்வாறாக அமைகிறது.

> "எண்ணம் நம்பிக்கையாய்,
> நம்பிக்கை செயலாய்
> செயல் பழக்கமாய்
> பழக்கம் குண நலனாய் மாறுகின்றது"

எனவே நமது பழக்க வழக்கங்களை பயனுள்ளதாக மாற்றி தமக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்த புனித வின்சென்ட் தே பவுலின் அடியொற்றி வாழ முற்படுவோம்.

திருமுழுக்குப் பெற்று திருச்சபையின் உறுப்பினராகிய ஒவ்வொருவருக்கும் மறைபரப்பு பணியாற்றும் கடமை உண்டு. குறிப்பாக புனித வின்சென்ட் தே பவுல் சபையில் இணைந்து இறைப்பணியாற்ற வேண்டியதன் தேவை குறித்து திருத்தூதர் பவுல் இவ்வாறு கூறுகிறார். "ஒரே உடலில் நமக்கு உறுப்புக்கள் பல உள. அந்த உறுப்புக்களெல்லாம் ஒரே செயலைச் செய்வதில்லை. அது போலவே நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம். ஒருவருக்கொருவர் உடனுறுப்புக்களாய் இருக்கிறோம்" (உரோ 12: 4-5). ஆக நமது உடலில் ஒரு உறுப்புக்கு பிரச்சனை ஏற்படும் போது அது


என்னுடையதல்ல என பிற உறுப்பு சொல்வதில்லையே. அவ்வாறே தலையாய திருச்சபையின் உறுப்புக்களாகிய நாமும் பிறர் துயர் துடைக்கும் உடன் உறுப்புக்களாக செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய காலச்சூழலிலே சந்திப்புக்காக ஏங்கும் ஒரு சமூகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அன்னை மரியாள் எலிசபெத்தம்மாளை சந்தித்து பணிவிடை செய்து பணிவிடையின் முக்கியத்துவத்தை நமக்கு சுட்டிக் காட்டினார். புனித அன்னைத் தெரெசாள் தெரு வீதியில் ஏழைகளை சந்தித்தார். இவ்வாறு அநேகம் புனிதர்களின் வாழ்க்கையும் நம் கண்முன் நிழலாடுகிறது. நம்மை சந்தித்த இறைவனின் நோக்கமும், நாம் பிறரை சந்தித்து பிறருக்கு ஆறுதலாக வாழ வேண்டும் என்பதே.

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் வின்செந்திய திருநாள் கொண்டாடும் போது எடுக்கப்படும் ஞாயிறு காணிக்கை வின்செந்திய பணிக்காக வழங்கப்படுகிறது. அதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இம்மாதம் (செப்டம்பர்) 24-ம் நாள் ஞாயிறு புனித வின்சென்ட் தே பவுல் சபை திருநாள் கொண்டாடும் போது வின்செந்தியர்கள் ஒப்புரவு திருவருட்சாதனம் பெற்று நற்கருணை உட்கொண்டு அன்றைய நாளை சிறப்பாகக் கொண்டாட உங்களை அன்போடு அழைக்கிறேன். அத்தோடு அக்டோபர் 2 -ம் நாள் தேசத்தோடு ஒரு நாள் என்னும் மைய சிந்தனையோடு நடைபெறும் குழித்துறை அரசு மருத்துவமனை சுத்தம் செய்யும் நிகழ்விலும் இயன்ற அளவு பங்கு கொண்டு ஆதரவு அளிக்க கேட்டுக்கொள்கிறேன்.

துயருறும் ஏழையில் இறைவனை கண்டுணர்ந்து பணி செய்த புனித வின்சென்ட் தே பவுலின் பணியை இறைவன் ஏற்றுக்கொண்டது போல வின்செந்தியர் பணியும் அமைய வாழ்த்துகிறேன். சபை நிறுவனர் அருளாளர் பிரடரிக் ஓசானம் அவர்களுக்கு விரைவில் புனிதர் பட்டம் பெற ஜெபிப்போம், புனித வின்சென்ட் தே பவுல் வழியாக இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

தந்தை மகன் தூய ஆவியின் ஆசி உங்களோடு தங்கியிருப்பதாக!



+மார் ஜார்ஜ் இராஜேந்திரன்
தக்கலை மறைமாவட்ட ஆயர்



# CATECHISM மறைக்கல்வி

> "என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உறுதியோடு இருங்கள். நிலையாய் நில்லுங்கள். ஆண்டவருக்காய் நீங்கள் உழைப்பது வீண்போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்"
> - (1 கொரி 15: 58)

அனைருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

**மறைவட்ட கருத்தரங்கு**

மாணவர்களின் விசுவாசத்தை மென்மேலும் ஆழப்படுத்தும் நோக்குடன் ஆசிரியர்களுக்கு இவ் வாண்டு மறைவட்டம் மற்றும் மறைமாவட்ட அளவில் கருத்தரங்கு நடத்த தீர்மானிக்கப் பட்டது.

**சூசைபுரம் மறைவட்டம்**

சூசைபுரம் மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு செப்டம்பர் 24 ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் புனித அல்போன்சா கல்லூரியில் வைத்து பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் குமரி மிஷன் மற்றும் செங்கோட்டை மிஷன் தொடக்கம் பற்றியும், இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் திருச்சபையின் வரலாறு, அருட் தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் தனிச்சபைகள் மற்றும் ஆராதனை முறைகள் பற்றியும் அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் ஆன்மீக வாழ்வில் ஆசிரியர்களின் பங்கு பற்றியும் வகுப்புகளை எடுத்தார்கள். தொடர்ந்து ஊக்குவிப்பாளர் திரு லாரன்ஸ் அவர்கள் நன்றி கூற மாலை 4 மணியளவில் நிறைவடைந்தது.

**ஆறுகாணி மறைவட்டம்**

ஆறுகாணி மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு அக்டோபர் 1 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு ஆறுகாணி திருக்குடும்ப ஆலயத்தில் வைத்து மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை டோபின் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. அருட்தந்தை டோபின் அவர்கள் வரவேற்க, அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் குமரி மிஷன் மற்றும் செங்கோட்டை மிஷன் தொடக்கம் பற்றியும், அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தனிசபைகள் மற்றும் மறைக்கல்வியில் ஆசிரியரின் பங்கு பற்றியும், இயக்குநர் தந்தை அவர்கள் திருச்சபையின் வரலாறு பற்றியும், அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் துன்புறுத்தப்படுகின்ற திருச்சபை என்ற சிந்தனையில் வகுப்புகளை நடத்தினர். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் நன்றி கூற மாலை 4 மணியளவில் நிறைவடைந்தது.

**மறைமாவட்ட அளவிலான**

**ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு**

ஆசிரியர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு கல்லுவிளை மறைக்கல்வி அலுவலகத்தில் செப்டம்பர் 29 அன்று 10 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான ஆசிரியர்களுக்கும், செப்டம்பர் 30 அன்று 1/2 முதல் 4 ஆம் வகுப்பு வரையிலான ஆசிரியர்களுக்கும் நடைபெற்றது. முதல் நாளன்று நடைபெற்ற பயிற்சியில் இயக்குநர் தந்தை அவர்கள் திருச்சபையின் வரலாறு, அருட்தந்தை பிரின்டோ அவர்கள் திருச்சபையில் மறைக்கல்வி, பேரருட்தந்தை டென்சி அவர்கள் வழிபாட்டு முறைகள் பற்றி வகுப்புகளை நடத்தினார்கள். இரண்டாம் நாளன்று நடைபெற்ற பயிற்சியில் வத்திக்கான் திருச்சபையின் வரலாறு, சிறப்புகள் பற்றி அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்களும் சீரோமலபார் திருச்சபையின் பாரம்பரியம் பற்றி அருட்தந்தை பிரின்டோ அவர்களும், திருவிவிலியம் பற்றி பேரருட்தந்தை டென்சி அவர்களும் தலைப்பில் கருத்தரங்கை வழிநடத்தினர். கலந்து கொண்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இயக்குநர் அவர்களின் நன்றியோடு மாலை 3 மணியளவில் கருத்தரங்கானது நிறைவடைந்தது.

**நன்றி**

இக்கருத்தரங்குகள் நடத்த ஏற்பாடு செய்து தந்த மறைவட்ட இயக்குநர்கள், வழிகாட்டிகள், ஊக்குவிப்பாளர்கள், காணொளி காட்சி வழியாக வகுப்புகளை வழங்கிய அருட்தந்தையர்கள், ஆசிரியர்களை பயிற்சிக்காக அனுப்பி வைத்த பங்குத் தந்தையர்கள், தலைமையாசிரியர்கள், பங்கேற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி.

அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு | இயக்குநர்

**உறவிய ஒருங்கிணைப்பு கூடுகை**

முக்கூட்டுக்கல் திருக்குடும்ப தேவாலயத்தின் கீழ் செயல்படும் குரியோடு உறவியத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டமானது 26.09.2017 மாலை 5.45 மணியளவில் பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தலைமையில் செபமாலையோடு ஆரம்பமானது. இந்நிகழ்வில் இல்வாழ்வு இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில், அருட்சகோதரி மேரி ஜாய்ஸ் எஸ்.எச், அருட்சகோதரி சோபியா எஸ்.எச் மற்றும் 30க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் கலந்து கொண்டனர். அருட்சகோதரி மேரி ஜாய்ஸ் அவர்கள் பிள்ளைகளை விசுவாச வாழ்வில் வளர்த்துதல் என்ற சிந்தனையில் புனித குழந்தை தெரசாவின் முன்மாதிரியை மையமாக வைத்து கருத்துக்கள் வழங்கினார். மங்கள வார்த்தை செபத்தோடு இரவு 8 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.

# HOLY CHILDHOOD
# குழந்தை ஈசோ



“உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” - மத் 22:39

**பொறுப்பாளர் கூடுகை**

குழந்தை ஈசோ இயக்க வழிகாட்டிகள் மற்றும் பொறுப்பாளர்களின் கூடுகை 12.08.2017 அன்று அலுவலகத்தில் அருட்சகோதரி ரோசிட் எப்.சி.சி அவர்கள் தலைமையில் தூய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. புனித பிரான்சிஸ் அசிசி அவர்களை 2017&2018 ஆம் ஆண்டின் புனிதராக தேர்ந்தெடுத்தனர். அருட்சகோதரர்கள் ஜோஸ், மகேஷ் ஆகியோர்கள் சிறப்பு வகுப்பெடுத்தனர்.

**கலைவிழா**

இவ்வாண்டு கலைவிழாப் போட்டிக்கான வயது வரம்பாக மழலையர் பிரிவிற்கு 1.1.2012க்கும், குழந்தைகள் பிரிவிற்கு 1.1.2008 க்கும் பிறகு பிறந்தவர்களாக நிர்ணயிக்கப்பட்டது. மழலைகளுக்கு செய்கைப் பாடல், கதை சொல்லுதல் (லூக் 19:1-10), குழந்தைகளுக்கு குழுநடனம், பேச்சுப்போட்டி (பிரான்சிஸ் அசிசி) ஆகிய போட்டிகள் நடத்த தீர்மானிக்கப் பட்டது. ஆண்டுத் திட்டத்தின் படி அனைத்து விதிமுறைகள் பின்பற்றுதல், குழந்தைகளுக்கு செபம் செய்ய கற்றுக்கொடுத்தல், மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை ஒன்று கூடி செபிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. அதன்படி ஆகஸ்டு மாதம் ஆயருக்காகவும், செப்டம்பர் மாதம் அருட் தந்தையர்களுக்காகவும் செபித்தனர். அக்டோபர் மாதம் அருட்சகோதரிகளுக்காகவும், நவம்பர் மாதம் குழந்தைப் குழந்தைகள் இல்லாத தம்பதியினருக்காகவும், டிசம்பர் மாதம் திருமணம் தடைபட்டு இருப்பவர்களுக்காகவும் செபிக்க வேண்டும் என்றும் இயக்குநர் தந்தை அவர்கள் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து இயக்குநர் அவர்களின் இறுதி செபத்துடன் இனிதே நிறைவடைந்தது.

அருட்தந்தை ஜோமோன்|இயக்குநர்.

## BIRTHDAY & FEAST DAY

| OCTOBER | BIRTHDAY OF REV. FATHERS |
|---|---|
| 21 | Rev. Fr. Augustine Thalodil |
| **OCTOBER** | **FEAST DAY OF REV. FATHERS** |
| 02 | Rev. Fr. Luka Kollamparampil CMI |

## Talent Showcase

தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தின் தலைமைத்துவ பயிற்சி மற்றும் கலைப் பயிற்சி 29.09.2017 வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 30.09.2017 காலை 9 மணி வரை தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. இறைவேண்டலுடன் ஆரம்பமான பயிற்சியை,



இயக்குநர் அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்று அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து மூன்று பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. புகைப்படம் மற்றும் ஒளிப்பதிவு பயிற்சியை சங்னாச்சேரி புனித ஜோசப் கல்லூரி மாணவரும், கிராமியக் கலைப் பயிற்சியை நாகர்கோவில் களரி மைய இயக்குநர் அருட்தந்தை ஜாய் அவர்களும், பேச்சுப் பயிற்சியை திரு. குமரித்தோழன் அவர்களும் வழங்கினர். இளைஞர்கள் தங்கள் விருப்பத்தின்படி பயிற்சியில் பங்கேற்றனர். மதிய உணவுக்குப் பின்னரும் பயிற்சி நடைபெற்றது. தேநீர் விருந்துக்குப் பின் பயிற்சி பற்றிய கருத்துக்களையும், பயிற்சி பெற்ற அனுபவங்களையும் பகிர்ந்தனர். தொடர்ந்து அரை மணி நேரம் துணை இயக்குநர் அவர்கள் தலைமையில் தியானம் நடைபெற்றது. இரவு உணவுக்குப் பின் பயின்ற பயிற்சியின் அரங்கேற்றமாக கலைஇரவு நடைபெற்றது. இதில் பேச்சுக் கலை பயின்றவர்கள் பட்டிமன்றமும், ஒளிப்பதிவு மற்றும் புகைப்படக்கலை பயிற்சி பயின்றவர்கள் அன்று நடைபெற்ற நிகழ்வுகளை ஒளிப்பதிவு செய்து காணொளியாகவும் காண்பித்தனர். கிராமியக்கலைப் பயின்றவர்கள் தப்பாட்டம் ஆடினர். பின்னர் மறுநாள் காலை 8 மணிக்கு இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருப்பலியோடு பயிற்சி இனிதே நிறைவடைந்தது. இதில் சுமார் 45 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

செல்வி பபிஷா | செயலர்




# தக்கலை மத்திய சபைச் செய்திகள்

## முப்பெரும் விழா

களியல் வட்டார சபையின் ஆண்டுவிழா, பொன்விழா மற்றும் புதிய பொறுப்பாளர் பணியேற்பு ஆகிய முப்பெரும் விழாக்கள் 13.8.2017 அன்று களியல் புனித மரியன்னை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை டினு, மத்தியசபை தலைவர் சகோ. ஐயாத்துரை தேசியசபை துணைத்தலைவர் சகோ சௌந்தரராஜ், மத்தியசபை துணைத்தலைவர் சகோ. மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். அருட்தந்தை அவர்கள் தியான உரையாற்றினார். தொடர்ந்து வட்டாரசபையின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சகோ. தனிஸ்லாஸ் அவர்களுக்கு மத்தியசபை தலைவர் பதவி பிரமாணம் செய்து வைத்தார். தொடர்ந்து துணைத்தலைவராக சகோ. ரமேஷ், செயலராக சகோ. தங்கசுவாமி, பொருளராக சகோ. ஜெஸ்டஸ், இளையோர் பிரதிநியாக சகோ. பிரேம் குமார் ஆகியோர்கள் புதிய தலைவரால் பணியேற்றுக் கொண்டனர். தொடர்ந்து சகோ. ஐயாத்துரை அவர்கள் வட்டாரசபை பொறுப்பாளர்கள் எவ்வாறு செயல்படவேண்டும் என விளக்க உரையாற்ற, தேசிய சபை துணைத்தலைவர் புதிய பொறுப்பாளர்கள் பணி சிறக்க வாழ்த்திப் பேசினார். தொடர்ந்து பொன்விழா மற்றும் வெள்ளிவிழா காணும் உறுப்பினர்களை மத்தியசபை துணைத்தலைவர் வாழ்த்திப் பேசினார். தொடர்ந்து கடந்த 6 ஆண்டுகள் வட்டார சபையை வழிநடத்திய சகோ. ஜெஸ்டஸ் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப் பட்டது. தொடர்ந்து சகோ. தனிஸ்லாஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற, இறுதி செபத்துடன் நிறைவடைந்தது. இந்நிகழ்வில் மத்திய சபை செயலர் சகோ எட்வின்சன், திட்ட கண்காணிப்பாளர் சகோ. ஷிபு மோன் ஆகியோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

## புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் பிரடெரிக் ஓசானாம் திருநாள்

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் அருளாளர் பிரடெரிக் ஓசானாம் திருநாள் 24.9.2017 கொண்டாடப்பட்டது. வின்செந்தியர்களின் பணியை பாராட்டியதோடு, வின்சென்ட் தே பவுல், ஓசானாம் ஆகியோர் வாழ்ந்த வாழ்க்கையை

வாழ வேண்டும் என்று பங்குத்தந்தை மறையுரையில் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப் பட்டது. அன்றைய திருப்பலியை வின்செந்தியர்கள் சிறப்பித்தனர்.

**கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர்** ஆலய வின்செந்தியர்கள் 24.9.2017 அன்று திருப்பலியை சிறப்பித்து தங்களின் பணி சிறக்க செபித்தனர்.

**நித்திரவிளை ஜெயமாதா** ஆலய வின்செந்தியர்கள் புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் அருளாளர் பிரடெரிக் ஓசானாம் திருநாட்களை முன்னிட்டு 24.9.2017 அன்று திருப்பலி சிறப்பித்து காணிக்கை மற்றும் திருவிருந்தில் பங்குகொண்டனர்.

**வயலின்கரை தூய அந்தோணியார்** ஆலய வின்செந்தியர் களுக்காக சிறப்புத் திருப்பலியும், நற்கருணை ஆராதனையும் ஆலயத்தில் 20.9.2017 அன்று நடைபெற்றது.

**வாறுதட்டு புனித பிரான்சிஸ்** ஆலய வின்செந்தியர்கள், 24.9.2017 சிறப்புத் திருப்பலியில் பங்கேற்று பிறரன்பு பணிக்காக செபித்தனர். தொடர்ந்து தத்துக்குடும்பங்களை சந்தித்து அவர்களுக்கு உதவிகளும் செய்தனர்.

**பள்ளிக்கோணம் திருஇருதய** ஆலயத்தில் 24.9.2017 அன்று ஓசானாம் மற்றும் வின்சென்ட் தே பவுல் திருநாட்கள் கொண்டாடப்பட்டன. அருட்தந்தை சாக்கோ ஆக்காத்தற அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக சி.எம்.சி அருட்சகோதரிகள் மெர்லிட் மற்றும் ஜெசி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். தொடர்ந்து தத்துக் குடும்பங்களுக்கு ரூ.1000 உதவி வழங்கப்பட்டது. இனிப்பும் வழங்கப்பட்டன.

**பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில்** செயல்படும் கிறிஸ்துராஜா, புனித ரீத்தா மற்றும் புனித இக்னேஷியஸ் ஆகிய மூன்று கிளைச்சபைகள் இணைந்து சபை நிறுவனர் மற்றும் பாதுகாவலரின் திருநாட்களை சிறப்பாக கொண்டாடினர். 24.9.2017 அன்று அலங்கரிக்கப்பட்ட புனிதரின் திருஉருவப் படம் நிறுவப்பட்டது. திருப்பலிக்கிடையே உறுதிமொழி புதுப்பிக்கப்பட்டது. முன்னதாக ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை பிரிண்டோஅவர்கள் அனைவருக்கும் எரியும் மெழுகு வர்த்தியை வழங்க, மத்திய சபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை உறுதி மொழி வாசிக்க உறுப்பினர்கள் ஏற்றுக் கூறினார்கள். சிறப்புக் காணிக்கைப் பவனி, முதியோர் இல்லம் சந்திப்பு நடைபெற்றன. அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டன.

சகோ.ஷாஜன் | செய்தித்தொடர்பாளர்

# இல்வாழ்வு இயக்கம்

## மது அடிமைகள் மறுவாழ்வு

மது அடிமைகள் மறுவாழ்வுப் பணி வாரந்தோறும் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் காலை 10 மணிமுதல் மதியம் 1 மணி வரை செயல்பட்டு வருகிறது. மது மற்றும் மனநோய்க்கான மருந்துகளும், ஆற்றுப்படுத்துதலும் சிறந்த மருத்துவரால் வழங்கப் படுகின்றன. ஆகவே, இந் நாட்களில் மருத்துவரை அணுகி சிகிட்சை பெற்றுச் செல்ல கேட்டுக்கொள்கிறேன்.

## ஆயரோடு சந்திப்பு

20.09.2017 அன்று மதியம் 1 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அவர்கள் தலைமையில், அருட்சகோதரி மேரி ஜாயிஸ், செவிலியர், குடும்ப நலப் பணியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர்கள் ஆயர் இல்லத்தில் ஆயர் அவர்களை சந்தித்தனர். ஆயர் அவர்களோடு உணவருந்திய பின் தூய ஆவிப்பாடலுடன் ஆரம்பமான கூடுகையில் இயக்குநர் தந்தை அவர்கள் இல்வாழ்வு இயக்கத் தின் செயல்பாடுகளை அறிமுக உரையாற்றி அனைவரையும் வரவேற்றார். ஆயர் அவர்கள் செயல்பாடுகளை கேட்டறிந்ததோடு, பணியார்களின் பணி அனுவத்தையும் மது மற்றும் மனநோய்க்கான சிகிட்சை முறைகளுக்காக பாராட்டுதல்க ளையும் தெரிவித்தார். குடும்பநலப் பணியாளர்கள் குடும்ப சந்திப்போடு நின்று விடாமல், குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு ஆற்றுப்படுத்துதல் போன்ற முறைகள் வாயிலாக தகுந்த தீர்வு காண வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். மேலும் திருமண தயாரிப்பு பயிற்சி சிறப்பாக நடைபெற்று வருவதால் பல்வேறு இளையோர்கள் பயன டைந்து வருவதாகவும், அந்த அனுபவத்தை பங்குகளில் திருப்பலிக்குப் பின் 5 நிமிடம் பகிர்தல் மென்மேலும் நலன் தரும் என்றுரைத்தார். மாதர் ஜோதிஸ் இயக்க வழிகாட்டிகளே இல்வாழ்வு இயக்கத்தின் வழிகாட்டிகளாக செயல்படுவார்கள் என்றும் தீர்மானிக்கப் பட்டு, சில செயல்பாடுகள் நடத்த தீர்மானிக் கப்பட்டது.

## திருமண ஆயத்தப் பயிற்சி

செப்டம்பர் 15, 16, 17 அன்று நடைபெற்ற பயிற்சியில் 9 பேர் பங்கேற்றனர். அடுத்தப் பயிற்சி நவம்பர் 17 காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 19 மாலை 4 மணிக்கு நிறைவடையும்.

## போட்டிகள் நடைபெறும் இடங்கள்

நவ 25: ஆறுகாணி
நவ 26: படந்தாலுமூடு
டிச 9 : மஞ்சாலுமூடு
டிச 10: சூசைபுரம்
டிச 16: நித்திரவிளை
டிச 17: தக்கலை-பிலாங்கலை
ஜன 6 : மறைமாவட்ட போட்டிகள்
ஜூன்7: இல்வாழ்வு இயக்க ஆண்டுவிழா

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்| இயக்குநர்

# மரியாயின் சேனை—தக்கலை கொமித்சியம்

அக்டோபர் மாதம் - மரியன்னையின் செபமாலையின் நறுமணம் வீசும் மாதம். அன்னை மரியோடு சேர்ந்து செபமாலை செபித்து இறைமகன் இயேசுவின் மீட்பை பெற தக்கலை கொமித்சியத்தின் சார்பாக உங்களை வாழ்த்துகிறேன்.

"திருச்சபையின் பிள்ளைகள் அனைவரும் இத்தூய கன்னியின் வணக்கத்தை சிறப்பாக பொது வழிபாட்டு வணக்கத்தை பெருமனத்துடன் போற்றி பேணி வளர்க்க வேண்டும். பல நூற்றாண்டுகளாய் திருச்சபையின் ஆசீரையும் போற்றி வரும் மரியன்னை பக்தி முயற்சிகளையும் பழக்க வழக்கங்களையும் மிகவாய் மதிக்க வேண்டும். முன் காலங்களில் கிறிஸ்து, கன்னிமரியாள், புனிதர்கள் ஆகியோர்களின் உருவ வணக்கம் பற்றி தீர்மானிக்கப்பட்டவைகளை மறை உணர்வுடன் கடைபிடிக்க வேண்டும் என மக்களுக்கு திருசங்கம் அறிவுரை கூறுகிறது." (திருச்சபை 67). "மரியன்னை சார்ந்த பக்தி முயற்சிகளின் வழியாக தாயை பெருமைப்படுத்தும் போது அவரது மகனாகிய இயேசுவையே மக்கள் அன்பு செய்து மாட்சிமைப் படத்துகின்றார் என்றும் திருசங்கம் உறுதியாக நம்புகிறது." (திருச்சபை 66). எனவே திருச்சபையின் கோட்பாடுகளுக்கு ஏற்ப செபமாலை வழியாக மரியன்னை பக்தியில் வளர அனைவரையும் அன்போடு கேட்டு கொள்கிறேன்.

## செபமாலைத் திருப்பவனி

நமது மறைமாவட்டத்தில் மரியன்னையோடு வருடந்தோறும் ஒரு திருப்பயணம் மேற்கொள்வது வழக்கம். தக்கலை கொமித்சியத்தின் சார்பாக இவ்வருடப் பயணம் அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி ஞாயிறு மதியம் 2.30 மணிக்கு நடைபெற இருக்கிறது. அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயம் முதல் படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயம் வரை உள்ள இத்திருப்பயணத்தில் நமது மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் குருக்கள், கன்னியர்கள், துறவிகள் மற்றும் பொது நிலையினர் கலந்து கொள்கின்றனர். இப்புனிதமான செபமாலைப் பவனியில் அனைத்து மரியாயின் சேனையர்களும், பங்கு மக்களும் கலந்து கொள்ள வேண்டும். அதோடு இத்திரு செபமாலைப் பவனி அனைவருக்கும் ஆசீர்வாதமாக மாற செபிக்கவும் நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பன்னீர் செல்வம்,
தலைவர்

# புனித அல்போன்சா கல்லூரி
## சூசைபுரம்

### அறிவியல் கண்காட்சி

7.9.2017 வியாழக்கிழமை இயற்பியல் மற்றும் வேதியல் துறை சார்பாக அறிவியல் கண்காட்சி நடை பெற்றது. திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகக் கல்வியியல் துறைப் பேராசிரியர் முனைவர் லெனின் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மாவட்டத்திலிருந்து இருபத்தொன்பது பள்ளி மாணவ மாணவியர் இக்கண்காட்சியில் படைப்புகளைச் சமர்ப்பித்தனர். நானூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பார்வையிட்டனர். முதல் பரிசு நாகர்கோவில் கார்மல் பள்ளியும், இரண்டாமிடம் மைலோடு அன்னைத் தெரசாப் பள்ளியும், மூன்றாமிடம் நாகர் கோவில் அல்போன்சாப் பள்ளியும் பெற்றன.

### தேசியக் கருத்தரங்கம்

வணிகவியல் துறை சார்பாகத் தேசியக் கருத்தரங்கம் 9.9.2017 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக பெங்களூரு அலையான்ஸ் பல் கலைக்கழக பேராசிரியர் முனைவர் சஜன் மேத்யூ அவர்களும் திருநெல்வேலி தூய சவேரியார் கல்லூரி பேராசிரியர் முனைவர் லூட்ஸ் பூபாலராயன் அவர்களும் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் இருநூற்று இருபத்தாறு மாணவ மாணவியரும் ஐம்பது பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். முப்பத்தாறு கல்லூரிகள் ஆராய்ச்சிப் படைப்புகளைச் சமர்ப்பித்திருந்தன.

### போட்டிகளில் பங்கேற்பு

19.9.2017 செவ்வாய்க்கிழமை ஆங்கிலத் துறை மாணவ மாணவியர்கள் திருநெல்வேலி தூய சவேரியார் கல்லூரியில் நடைபெற்றப் போட்டிகளில் பங்கேற்றனர். முதல் மற்றும் இரண்டாம் இடங்களில் இரு பரிசுகளைப் பெற்றனர். 28.9.2017 வியாழக்கிழமை தடிக்காரன் கோணம் ரூபன் கல்லூரியில் கலந்து கொண்டு பரிசு பெற்றனர்.

### ஆங்கில மன்றத் தொடக்கவிழா

கல்லூரி ஆங்கிலத்துறை சார்பாக இலக்கிய மன்றத் தொடக்க விழா 25.9.2017 திங்கட்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. கல்லூரித் தாளாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இசையாஸ் அவர்கள் சிறப்புரையாற்றினார். போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்குச் சட்ட ஆலோசகர் வழக்குரைஞர் ஜஸ்டினார் ராஜ் அவர்கள் பரிசு வழங்கிப் பாராட்டினார்.

### கணினி அறிவியல் மன்றம்

கணினி அறிவியல் மன்றத்

தொடக்கவிழா 26.9.2017 அன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் நாஸ்டாக் நிறுவன உரிமையாளர் திரு. ஸ்டேன்லி தேவகுமார் அவர்கள் கலந்து கொண்டார். மாணவ மாணவியருக்கு போட்டிகள் நடத்தப்பட்டன.

**தேசியப் பேரிடர் மேலாண்மை**

தேசிய பேரிடர் மேலாண்மை பாதுகாப்புப் பயிற்சி 27.9.2017 புதன்கிழமை அன்று நடத்தப் பட்டது. கன்னியாகுமரி மாவட்ட பேரிடர் மேலாண்மை பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் முன்னி லையில் தேசியப் பயிற்சியாளர் பயிற்சி வழங்கி சிறப்பித்தார்.

**மாநிலக் கருத்தரங்கம்**

கணிதத்துறை சார்பாகக் கருத்தரங்கம் 28.9.2017 வியாழக் கிழமை அன்று நடைபெற்றது. குற்றாலம் ஆதிபராசக்திக் கல்லூரிக் கணிதத் துறைப் பேராசிரியர் முனைவர் சித்ராதேவி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மாணவ மாணவியர்களுக்கு முப்பரிமாண அடிப்படையில் போட்டிகள் நடைபெற்றன. மாநில அளவிலான இக்கருத்தரங்கில் பத்து கல்லூரிகளிலிருந்து 85 மாணவர்களும் 10 பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

**விளையாட்டு போட்டிகள்**

2017 செப்டம்பர் 21 அன்று வியாழக்கிழமை பாளையங் கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரியில் நடைபெற்ற ஆண்க ளுக்கான இறகுப் போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

26, 27, 28 ஆகிய நாட்களில் புளியங்குடியில் நடைபெற்ற பல்கலைகழக அளவிலான பெண்கள் கபடிப் போட்டியில் நமது கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

பேரருட்.ஆன்றணி ஜோஸ்|தாளாளர்

**புதிய பொறுப்பில்...**


*2017 அக்டோபர் 1 முதல் அருட்தந்தை ரிட்டோ அவர்கள் இளங்குருமட நிதியாளராகவும், பென்கிரி பங்குத்தந்தையாகவும் பணியாற்றுவார்.

*அருட்தந்தை ஜினு தெக்கேதலக்கல் அக்டோபர் 1முதல் தெற்றியோடு பங்குத்தந்தையாகவும், காமராஜ்நகர் புலரி கம்யூனிக்கேஷன் இயக்குநராகவும் செயலாற்றுவார்.

*அருட்தந்தை மிஜோ புத்தன்புரையில் காட்டாத்துறை புனித மிக்கேல் ஆலய பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு சீனாய் தியான இல்லத்தின் முழுநேர இயக்குநராக அக்டோபர் 15 அன்று பொறுப்பேற்க உள்ளார்.

*அருட்தந்தை அனில்ராஜ் காட்டாத்துறை ஆலய பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார். அக்டோபர் 15 அன்று பொறுப்பேற்க உள்ளார்.

**மறைமாவட்டச் செய்திகள்**



# மறைமாவட்டச் செய்திகளும் நிகழ்வுகளும்

**தையல் மையம் மந்திரிப்பு**

குழித்துறை காட்டுவிளை கல்லுக்கட்டியில் கட்டப்பட்ட தையல் மையம் செப்டம்பர் 12 அன்று ஆயர் அவர்கள் மந்திரித்து திறந்து வைத்தார். இந்நிகழ்வில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், பேரருட்தந்தை ரோபின்ஸ், பேரருட்தந்தை சத்தியநேசன், அருட்தந்தை சஜி எலம்பாசேரில், முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் திரு. ரவிசங்கர், திரு. சௌந்தரராஜ் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை அருட்தந்தை தோமஸ் தக்கலை, திரு. மரியதாஸ் மற்றும் எம். எம்.எம் அருட்சகோதரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**தொடர் பயிற்சி**

இளங்குருக்களின் குருத்துவ வாழ்வின் தொடர் பயிற்சி செப்டம்பர் 12 மற்றும் 13 ஆகிய இருநாட்கள் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. ஊட்டி மறைமாவட்ட அருட்தந்தை ஞானதாஸ், பேரருட்தந்தை டென்சி மற்றும் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் ஆகியோர்கள் பயிற்சியை வழிநடத்தினார்கள். பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

**தகவல்கள்**

ஜெர்மனியிலிருந்து மறைமாவட்டத்திற்கு திரும்பிய அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் புதிய பொறுப்பேற்கும் வரை சங்கமத்தில் தங்கியிருப்பார்.

அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் தலைமையில் கட்டப்பட்ட குமாரகோவில் பெத்சாய்தா தியான இல்லத்தின் கூடுதல் கட்டிடத்தை செப்டம்பர் 14 அன்று ஆயர் அவர்கள் மந்திரித்து திறந்து வைத்தார்.

அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் செப்டம்பர் 27 அன்று முனைவர் படிப்பிற்காக உரோமை புனித ஆன்சல்மோ பல்கலைகழகத்தில் சேர்ந்துள்ளார்.

அக்டோபர் 19 அன்று டெல்லியில் நடைபெறும் தேசிய சிறுபான்மையர் உரிமைகள் மாநாட்டில் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் பங்கேற்க உள்ளார்.

அற்புதர் கார்மென்ட்ஸ் என்னும் புதிய வி-ஸ்டார் அலகு வயலின்கரை ஆலயத்தில் தொடங்கப்பட உள்ளது.

# மறைவட்ட செய்திகள்




## நித்திரவிளை மறைவட்டம்

### முஞ்சிறை ஆலய நிகழ்வுகள்

**ஓணப்பண்டிகை**

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் ஓணப் பண்டி கையை முன்னிட்டு 2.9.2017 மற்றும் 3.9.2017 ஆகிய இருநாட்கள் பெரியவர்களுக்கும் மாணவர்களுக்கும் பூக்களப்போட்டியும், விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது

**ஆண்டவரோடு மாலைநேரம்**

3.9.2017 அன்று மாலை 4 மணிக்கு ஆண்டவரோடு இணைந்த மாலை நேரம் என்ற மைய சிந்தனையில் தியானம் நடைபெற்றது. இயேசுவின் சீடனாய் இருப்பதற்கான தகுதிகள், சீடர்களின் வாழ்வை போன்று பொறுமையோடு சிலுவை சுமத்தல் என்ற சிந்தனைகள் அடிப்படையில் தியானம் அமைந்தது. தொடர்ந்து ஒப்புரவு மற்றும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

**சிலுவையின் புகழ்ச்சி திருநாள்**

சிலுவையின் புகழ்ச்சி திருநாளான 14.9.2017 அன்று அருட்தந்தை டோஜி அவர்கள் தலைமையில் திருப்பலி மற்றும் சிலுவை முத்தம் செய்தல் நிகழ்வும் நடைபெற்றது.

**கருத்தரங்கு மற்றும் களப்பயணம்**

30.9.2017 மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு மற்றும் சுற்றுலா நடைபெற்றது. கருத்தரங்கை அருட்சகோதரி தீபா அவர்கள் ஒருங்கிணைத்தார். தொடர்ந்து 'அப்பா' என்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டது. மதியம் 1.30 மணிக்கு களப்பயணமாக நட்டாலம், புலியூர்குறிச்சி, உதயகிரி கோட்டை ஆகிய சுற்றுலா தலங்களுக்கு சென்றனர். மேலும் பெருஞ்சிலம்பு மனவளர்ச்சி குன்றியோர் இல்லம் சென்று குழந்தைகளை சந்தித்து, உரையாடி அவர்களுக்கு இனிப்பு மற்றும் உதவி வழங்கினர். அருட்தந்தை அஜிஷ், அருட்தந்தை டோஜி, அருட்சகோதரி தீபா ஆகியோர்கள் இந்நிகழ்வை வழிநடத்தினர்.

**அமல மரியா திருவிழா**

சீனிவிளை புனித அமல மரியா திருவிழா 6.9.2017 முதல் 10.9.2017 வரை 5 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் திருப்பலியும், முதல் மூன்று நாட்கள் நற்கருணை ஆராதனையும், நான்காம் நாளன்று

திருமுழுக்கு, உறுதிபூசுதல் அருளடையாளங்களும், தேர்பவனியும் நடைபெற்றன. நிறைவு நாளன்று காலை 10.30 மணிக்கு பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் முதல் திருவிருந்தும் நடைபெற்றன. மாலை 6 மணிக்கு திருக்கொடியிறக்கப்பட்டு, பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் நடைபெற்றன. 11 அன்று இறந்தோரின் நினைவுத் திருப்பலியுடன் திருவிழா நிறைவடைந்தது.

<u>மஞ்சாலுமூடு மறைவட்டம்</u>

## ஆலய திருவிழா

தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலய திருவிழா 27.9.2017 அன்று மாலை பங்குத்தந்தை அருட்தந்தை ஜோமோன் அவர்கள் தலைமையில் திருக்கொடியேற்றுதலுடன் ஆரம்பமானது. 29.9.2017 அன்று ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி அருளடையாளங்கள் வழங்கினார். நிறைவு நாளன்று இராசைத் திருப்பலி, அன்பின் விருந்து மற்றும் பக்த இயக்கங்கள் ஆண்டுவிழாவும் நடைபெற்றன.

மஞ்சாலுமூடு சிறுமலர் மறைவட்ட ஆலயதிருவிழா 24.9.2017 அன்று மறைவட்ட முதன்மை தந்தை பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் தலைமையில் திருக்கொடியேற்றலுடன் ஆரம்பமானது. அன்றைய தினம் ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி அருளடையாளங்கள் வழங்கினார். அனுதினமும் செபமாலை, புகழ்மாலை, நவநாள் நடைபெற்றன. முதல் மூன்று நாட்கள் அருட்தந்தை குடந்தை பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் நற்செய்திப் பெருவிழா நடைபெற்றது. மேலும் மறைக்கல்வி, பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாக்களும் நடை பெற்றன. மறுவாழ்வு என்ற நாடகமும் இடம்பெற்றது.

## ஜூபிலி

முழுக்கோடு புனித தோமையார் ஆலய ஜூபிலி ஆண்டை முன்னிட்டு ஒரு குடும்பத்தார் பிறிதொரு குடும்பத்திற்காக ஆண்டு முழுவதும் செபித்து ஜூபிலி ஆண்டின் நிறைவில் தாங்கள் செபித்த அக்குடும்பத்தாருக்கு இறைவன் செய்த நன்மைகளுக்கு நன்றி சொல்லி பரிசு வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு 24.9.2017 அன்று குடும்பங்களின் பெயர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இளங்குருமட அதிபர்

முக்கூட்டுக்கல் இளம் குருமட புதிய அதிபராக பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் 5.9.2017 அன்று பொறுப்பேற்றார். முன்னாள் அதிபர் தற்போது மேற்படிப்புக்காக உரோமைக்கு சென்றுள்ளார்.

தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா|சினேக லதா|செலின் மேரி

## BISHOP'S ENGAGEMENTS OCTOBER 2017

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sun | 07.30am | Annikarai: Blessing of Kodimaram |
| 2 | Mon | 09.30am | Pastoral Council Meeting at Sangamam |
| 3 | Tue | 12.00pm | Trivandrum: Meeting with Fr. Tom Uzhunnalil sdb |
| 4-6 | | | Engaged |
| 7 | Sat | 10.00am<br>05.00pm | Bishop's House: Meeting of CML department<br>Panavilai: Vespers and Homily |
| **8** | **Sun** | **05.00pm** | **Kaliyal: Blessing of renovated Church** |
| 9 | Mon | 02.00pm | Bp's House: Meeting with communication dept. |
| 10 | Tue | 03.00pm | Meeting with Director of SM Matrimony |
| 10 | Tue | 03.00pm | Curia Meeting\| Meeting with De-addiction dept. |
| 12 | Thu | 05.00pm | Visit to Minor Seminary |
| 13 | Fri | 02.30pm | Bishop's House: Interdepartmental Meeting<br>Submission of 2018 annual program |
| 14 | Sat | | Shenkottai visit |
| **15** | **Sun** | **02.00pm**<br>**04.00pm** | **CML Rally from Kalluvilai to Kattathurai**<br>**Kaliyal: Golden Jubilee Celebration**<br>**Priests Annual Retreat begins at Sangamam** |
| 16-19 | Mon | 07.00am | Priests Annual Retreat |
| 20 | Fri | | Priests Annual retreat ends with Priests Conference |
| 21 | Sat | 11.00am<br>04.00pm | KKSSS: Inauguration of Health and Wellbeing Project<br>Thakkalivilai: Consecration of New Church |
| **22** | **Sun** | <br>**11.00am** | **Mission Sunday \| Chain Rosary in the Families**<br>**Champakara: Mission Sunday Qurbana** |
| 23 | Mon | 10.00am | Meeting with Palai friends of Thuckalay>>Thuckalay |
| 24 | Tue | | Travel to Vellore |
| 25 | Wed | | Vellore: Declarat. of Pontifical Right, SH congregation |
| 26\|27 | Thu | | Chennai\| Chennai >>Thuckalay |
| 28 | Sat | | Bishop's House |
| **28** | **Sun** | **07.45am**<br>**02.30pm** | **Mezhacode: Pastoral Visit**<br>**Rosary Rally – Athencode to Padanthalumoodu** |
| 30\|31 | M\|T | 10.00am | Mariyagiri: Marriage Qurbana \| Bishop's House |

**Fr. Thomas Sathianesan |**Eparchial Chancellor



Parish Feast - Deva Matha, Killiyoor
01-10.09.2017



TCYM - Talent Showcase
29.09.2017



Onam Celebrations at Munchirai and
Athencode 03.09.2017

## Commerce National Seminar at College
## 09.09.2017






**வெற்றிகரமான இரண்டாம் ஆண்டு**

**இலவச பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு**

DB Tech
Skilling India
Munchirai

Courses Offered: ITES | Sales and Retail | Hospitality



Contact: 04651 235277, 9786395536



For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570